# பத்திரிக்கைச் செய்தி

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் – திருநெல்வேலி பிரிவு.

## பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டரங்கில் இலவச கோடை கால பயிற்சி முகாம்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் திருநெல்வேலி பிரிவு பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்கில் கீழ்கண்ட விவரப்படி கோடை கால பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது.

### 21 நாட்கள் கோடை கால பயிற்சி முகாம் (அனைத்து வயதினருக்கும்)

இப்பயிற்சி முகாமானது அனைத்து வயதினருக்கும் தடகளம், கூடைப்பந்து, குத்துச்சண்டை, கால்பந்து, ஜிம்னாஸ்டிக்ஸ், கைப்பந்து, வாலிபால், டென்னிஸ் ஆகிய விளையாட்டுக்களுக்கு என்.ஐ.எஸ் படித்த SDAT பயிற்சியாளர்களால் பயிற்சி அளிக்கப்படும். இந்த பிரத்யேகமாக பயிற்சி முகாம் 02.05.2017 முதல் 22.05.2017 வரை நடைபெறவுள்ளது. நுழைவு கட்டணம் இல்லை. இலவசமாக பயிற்சி முகாமில் கலந்து கொள்ளலாம். இப்பயிற்சி முகாம் மாலை 3.30 மணி முதல் 6.00 மணி வரை நடைபெறும்.

### 15 நாட்கள் உலகத் திறனாய்வு திட்ட இருப்பிட பயிற்சி முகாம்

இந்த உலகத் திறனாய்வு திட்ட கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாமானது, திருநெல்வேலி கல்வி மாவட்டத்தின் சார்பில், 21.04.2017முதல் 25.04.2017 வரை மேலப்பாளையம் SDAT விளையாட்டு அரங்கத்திலும், சேரன்மகாதேவி கல்வி மாவட்டத்தின் சார்பில் 22.04.2017முதல் 26.04.2017 வரை கல்லிடைகுறிச்சி SDAT விளையாட்டு அரங்கத்திலும், தென்காசி கல்வி மாவட்டத்தின் சார்பில் 21.04.2017முதல் 25.04.2017 வரை சிவலார்குளம் SDAT விளையாட்டு அரங்கத்திலும் வைத்து 6,7,8 வகுப்புகள் படிக்கும், 2016–17 ஆம் ஆண்டிற்கான உலகத் திறனாய்வு திட்ட போட்டிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு நடத்தப்படுகிறது. இந்த 5 நாட்கள் பயிற்சி முகாம் முடிந்தவுடன் இந்த மூன்று கல்வி மாவட்டங்களையும் சேர்த்து, ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலிருந்தும் மேற்படி பயிற்சி முகாம்களில் கலந்து கொண்ட 60 மாணவ, மாணவிகள் வீதம் 180 மாணவ, மாணவிகள் 15 நாட்கள் இருப்பிட பயிற்சி முகாமில் கலந்து கொள்கிறார்கள். இப்பயிற்சி முகாம் 06.05.2017 முதல் 20.05.2017 வரை 15 நாட்கள் நடைபெறவுள்ளது. இப்பயிற்சி முகாமில் கலந்து கொள்ளும் மாணவ, மாணவிகள் 06.05.2017 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்கில் ஆஜராக வேண்டும். இவர்களுக்கு தங்குமிடம், உணவு மற்றும் அடிப்படை விளையாட்டுத் திறன் Speed, Strength, Endurance, Flexibility and Combine Motor Qualities போன்ற அடிப்படை விளையாட்டு திறன்களை மேம்படுத்த அறிவியல் அடிப்படையிலான பயிற்சிகள் அளிக்கப்படும். இப்பயிற்சி முகாமின் நிறைவு நாளன்று சீருடைகள் வழங்கப்படும்.

**இது சம்பந்தமான முன் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் முனைவர்.க.சேவியர் ஜோதி சற்குணம் அவர்கள் தலைமையில் 10.04.2017 அன்று காலை 06.00 மணிக்கு பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்கத்தில் வைத்து நடைபெற்றது.**

மேற்படி பயிற்சி முகாமின் நிறைவு நாள் அன்று அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில், வாலிபால் பயிற்றுநர் முனைவர். வெங்கடேஷ், Gymnastics Coach திரு.C.J.தாசன், SDAT தடகளப் பயிற்றுநர் திரு.R.சத்யகுமார், நீச்சல் பயிற்றுநர் திரு. கர்ணன், Boxing Coach திரு. சிவ் குமார் பால், Basketball Coach திரு. பழனி விக்னேஷ், Tennis பயிற்றுநர் திரு. S.குமரமணிமாறன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

மேற்கண்ட தகவலை திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் தெரிவித்தார்கள்.

ஒம்/–
மாவட்ட விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அலுவலர்
திருநெல்வேலி